**இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் - 2010**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் நிலைவரம், அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகள், காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று, நான் அபிப்ராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

(அ) ஆலோசனைக் கற்கைநெறிகள் தொடர்பாக செலுத்த வேண்டிய கணக்குகளில் ரூபா 31,263,459 தொகையான மீதியில் உள்ளடக்கப்பட்ட சிங்கள மற்றும் தமிழ் நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்பாடுகளுக்கான 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகள் தொடர்பாக நிறுவகத்தின் வருமானத்திற்கு மாற்றப்பட வேண்டியிருந்த ரூபா 5,347,485 தொகையானது இலங்கைக் கணக்கீட்டு நியமம் 10 இன் 6 ஆவது பிரிவிள் பிரகாரம் வருமானத்திற்கு மாற்றப்படாமல் செலுத்த வேண்டிய செலவினமாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 18 இன் பிரகாரம் தொடர்ந்தும் பாவிக்கப்பட்டு வருகின்ற முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட்டு கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதிக்காலாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த கழிவறையினை திருத்தம் செய்தல் செயற்பாடுகள் அவ்வருடம் இறுதிவரையிலும் பூர்த்திசெய்யாதிருந்த போதிலும் அதற்காக செய்யப்பட்ட ரூபா 3,315,594 தொகையான செலவினங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலைக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக பிழையாக கட்டிடங்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) புதிய விடுதிக் கட்டிடத்திற்கான மின்சாரத்தைப் பெறும் போது பாதுகாப்பு வைப்பாக செலுத்தப்பட்ட ரூபா 889,000 தொகையினை பாதுகாப்பு வைப்புக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் வெளிநாட்டுப் பயணச் செலவினம் ரூபா 396,732 தொகையினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

மீதிகளின் உறுதிப்படுத்தல்கள், ஆலோசனையாளர்களின் அறிக்கைகள், நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு, காலப்பகுப்பாய்வுகள் மற்றும் விபரமான பட்டோலைகளைகளைச் சமர்ப்பிக்காமை காரணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 265,712,571 தொகையான சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களை திருப்திகரமாக கணக்காய்வு செய்ய முடியாதிருந்தது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1982 இன் 09 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக அதிகாரச் சட்டத்தின் | |
| 13.1 ஆம் பிரிவு | கட்டுப்பாட்டுச் சபையின் கூட்டம் ஒவ்வொரு மாதமும் ஆகக் குறைந்தது ஒரு தடவையாவது நடைபெற வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டம் ஏழு தடவைகள் மாத்திரமே நடைபெற்றிருந்தன. |
| (ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 153 ஆம் பிரிவு | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் புதிய கட்டிடத் தொகுதிக்காக 2006 தொடக்கம் 2008 வரையான காலத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 6,659,708 தொகையான ஆலோசனை சேவைக் கட்டணம் தொடர்பாக ரூபா 332,985 நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 7.4.1 ஆம் பந்தி | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஆகக் குறைந்தது மூன்று மாதத்திற்கொரு தடவை கூட வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டின் போதும் குழு ஒரு தடவை மாத்திரமே கூடியிருந்தது. |
| (ii) 9.2(டீ) | நிறுவகத்தின் கூட்டிணைந்த திட்டம் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 2.1 நிதி மீளாய்வு

### 2.1.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 480,323 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,365,892 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டுக்கான நிதி விளைவுகளில் ரூபா 885,569 தொகையான பின்னடைவை சுட்டிக்காட்டியது. நிறுவகத்தின் செயற்பாட்டு வருமானம் ரூபா 26,543,326 இனால் குறைவடைந்திருந்தமை இப் பின்னடைவிற்கு பிரதான காரணியாக தாக்கமளித்திருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றுகை

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

மீளாய்வாண்டில் நிறுவகத்தினால் மொத்தம் 10,073 விரிவுரை மணித்தியாலங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. அதில் 4,972 மணித்தியாலங்கள் நிறுவகத்தின் நிலையான மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் மதியுரைஞர்களால் நடாத்தப்பட்டிருந்ததுடன் 5,101 விரிவுரை மணித்தியாலங்கள் வெளிவாரி மதியுரைஞர்களால் நடாத்தப்பட்டிருந்தன. இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் விரிவுரை மணித்தியாலங்கள் 18,535 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டில் 8,462 விரிவுரை மணித்தியாலயங்களால் குறைவடைந்திருந்தமை காணக்கூடியதாக இருந்தது. மீளாய்வாண்டின் நிறுவகத்தின் செயலாற்றல் இவ்வாறு பின்னடைந்திருந்தமைக்கு செயற்பாட்டு மிகை குறைவடைந்திருந்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

(i) மீளாய்வாண்டின் போது நிறுவகத்தில் நடைபெற்ற கற்கை நெறிகளின் எண்ணிக்கை 106 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டில் நடைபெற்ற கற்கைநெறிகளின் மொத்த எண்ணிக்கை 137 ஆக இருந்தது. இதன்

பிரகாரம் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது 2010 ஆம் ஆண்டின் கற்கை நெறிகளின் எண்ணிக்கை 31 ஆல் குறைவடைந்திருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது பட்டியல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றல் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றது.

| ஆண்டு | பட்டியல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | காலம் நீடிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2009 | 74 | 58 | 20 | 1,500 |
| 2010 | 87 | 33 | 54 | 887 |

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது 2010 ஆம் ஆண்டில் பூர்த்தியடைந்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 43% இனால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது நிறுவகத்தினால் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட 87 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 11 தொழில் அபிவிருத்தி நிலையங்களின் கீழ் பட்டியல்படுத்தப்பட்டிருந்தன. இந்நிலையங்களுக்கிடையே வினைத்திறன் மற்றும் தரத்துக்கான நிலையங்களிலும் ஆராய்ச்சி, வெளியீடுகள் மற்றும் கொள்கை ஆய்வுகளுக்கான நிலையங்களிலும் எவ்வித செயலாற்றலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இதன் பிரகாரம் பட்டியல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் செயலாற்றல் 37.9% ஆன குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தன.

(iii) பதவியினரின் பற்றாக்குறை மற்றும் செயலாற்றல் சம்பந்தமான கவனக்குறைவினால் கீழே காட்டப்படுகின்றவாறு தொழில் அபிவிருத்தி நிலையங்கள் சிலவற்றின் செயலாற்றல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்ட போது மீளாய்வாண்டின் போது மிகவும் குறைவடைந்து காணப்படுகின்றது.

| நிலையம் | 2010 | | 2009 | | 2009 ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது செயலாற்றல் குறைவின் சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | மணித்தியாலங்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | மணித்தியாலங்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | மணித்தியாலங்களின் எண்ணிக்கை |
| மொழி ஆய்வு | 08 | 1,233 | 15 | 2,661 | 47 | 54 |
| தகவல் தொழில்நுட்பம் | 10 | 713 | 22 | 1,958 | 55 | 64 |

### 2.2.2 சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ஐ எல் ஓ) செயற்திட்டம்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.**

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உதவியின் கீழ் வணிக அபிவிருத்திக்கு மிகவும் சிறந்த சேவைகளை வழங்கும் நோக்குடன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வணிகப் பிரமாணங்கள் மீதான புரிந்துணர்வை வழங்குகின்ற 97 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும் அதற்குத் தேவையான முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கும் 2007 ஆம் ஆண்டில் மேற்கூறப்பட்ட அனுசரணை நிறுவகம் இணங்கியிருந்ததுடன் இந் நிறுவனம் இதற்காக ரூபா 8,620,447 தொகையொன்றினை விடுவித்திருந்தது. 2008 ஆம் ஆண்டின் இறுதியில் இச் இசயற்திட்டம் முடிவுற்றிருந்த போதிலும் கணக்குகளில் முடிவுற்ற வேலைகளுக்காக செலுத்த வேண்டிய செலவாக ரூபா 4,794,300 முன்கொண்டுவரப்பட்டிருந்தது. அது இதுவரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இருந்த போதிலும் இது தொடர்பான எவ்வித விபரங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 ஒப்பந்த நிர்வாகம்

#### 2.2.3.1 புதிய கட்டிடத் தொகுதி

2008 யூலை 15 ஆந் திகதிய 3/ஏடீ/3-1 ஆம் இலக்க ஒப்பந்த வேலைக் கையளிப்புக் கடிதத்தின் படி ரூபா 60,353,410 பெறுமதியான புதிய கட்டிடத் தொகுதியின் முதற் கட்ட

நிர்மாணம் 2008 ஒகஸ்ட் 20 ஆந் திகதி தொடங்கி 20 மாதங்களில் முடிவுறுத்த வேண்டியிருந்தது. மேலும் 2008 நவம்பர் 12 ஆந் திகதிய அரசாங்க அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடிதத்தின்படி விடுதிக் கட்டிடம் 2009 ஆண்டின் போது பூர்த்திசெய்ய வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் இது வரையில் 3 வருடம் மட்டிலான காலம் கடந்திருந்த போதிலும் விடுதிக் கட்டிடத்தை பூர்த்தி செய்து கையளிப்பதற்கு ஒப்பந்தகாரரினால் இயலாதிருந்தது.

### 2.2.3.2 விடுதியில் உள்ள கழிவறை முறைமையினை புதுப்பித்தல்

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவகத்தின் விடுதியில் உள்ள 74 கழிவறைகளை புதுப்பிப்பதற்காக நிர்மாணக் கம்பனியொன்றுடன் 2007 திசெம்பர் 31 இல் ரூபா 19,416,032 பெறுமதியான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. இதன் பிரகாரம் மூன்று கட்டங்களின் வேலைகள் செயற்படுத்தப்பட்டு 2008 யூலை 30 ஆந் திகதியில் சகல வேலைகளையும் முடித்து கையளிக்க வேண்டியிருந்தது. 2010 சனவரி 10 ஆந் திகதியில் உள்ளவாறு செய்யப்பட்ட வேலைகளின் சான்றுப்படுத்தப்பட்ட பெறுமதி ரூபா 12,454,513 ஆக இருந்ததுடன் இதற்காக ரூபா 9,066,557 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இருந்தும் ஒப்பந்தக் கம்பனி காலத்தை பல தடவைகள் நீடித்ததன் பின்னர் 58 கழிவறைகளை மாத்திரம் பூர்த்தி செய்து 2009 ஆண்டின் இறுதியில் கைளித்திருந்தது. கணக்காய்வுத் திகதியான 2011 மே 31 வரையில் எஞ்சிய 16 கழிவறைகளுக்கான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்தக்காரரினால் ஒப்பந்தம் மீறப்பட்டு வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தமையினால் விடுதியிலுள்ள 13 அறைகள் எவ்வித உபயோகத்திற்கும் எடுக்கப்படாமல் இரண்டு வருடங்களுக்கும் மேலான காலம் செயற்பாடற்று மூடப்பட்டிருந்தது.

(இ) உடன்படிக்கையை மீறியமை தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாதிருந்ததுடன் எஞ்சிய 16 கழிவறைகளை பழுதுபார்க்கும் செயற்பாடுகளுக்காக ஒப்பந்தகாரர்களிடமிருந்து விலைமனுக்கள் அண்மையில் பெறப்பட்டிருந்த போதிலும் அறிக்கைத் திகதி வரை பொருத்தமான ஒப்பந்தகாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

மதிப்பிடப்பட்ட ரூபா 515 மில்லியன் பெறுமதியான கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக 2007 ஆம் ஆண்டில் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஆரம்ப செலவினங்களை மேற்கொண்டு வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த வேளை நிறுவகத்தினால் எடுக்கப்பட்டிருந்த கொள்கைத் தீர்மானித்தின் அடிப்படையில் கட்டிடத் தொகுதியின் முதலாம் கட்டமான விடுதிக் கட்டிடம் மாத்திரம் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. விடுதிக்கட்டிடம் மாத்திரம் நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தகாரருக்குக் கையளிக்கப்பட்டிருந்த போதும் ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்படாத நிருவாகக் கட்டிட நிர்மாணிப்பு ஆரம்பச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டமையினால் நிறுவகத்திற்கு கீழே காணப்படுகின்ற நட்டங்கள் ஏற்பட்டிருந்தன.

(i) 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 594,329 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கழிவறை முறைமைகளிற்கு பாதிப்பு ஏற்படாத முறையில் விடுதிக் கட்டிடத்தின் திட்டங்கள் மாற்றப்பட்டமையினால் அடித்தளத்தில் 500 சதுர அடி அளவிலான பகுதி கைவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கட்டிட நிர்மாணிப்பு நடவடிக்கைகளின் போது கழிவறை முறைமைகளுக்கு பாதிப்பு ஏற்படுகின்றமையினால் தற்போது கழிவறை முறைமைகள் உடைத்து அகற்றப்பட்டிருந்தன.

(ii) சாரதி விடுதியும் இரண்டு வகுப்பறைகளும் உடைத்து அகற்றப்பட்டிருந்தன.

(iii) நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்த நிருவாகக் கட்டிடத்தின் அத்திவாரம் வெட்டுவதற்காக நிலக்கீழ் மின்சார வழங்களுக்கான கேபிள் உள்ள இடத்தினை அகற்றி உத்தேசிக்கப்பட்ட கட்டிடத்திற்கு இடையூறு இல்லாத வகையில் அமைப்பதற்காக இலங்கை மின்சார சபைக்கு ரூபா 430,340 தொகையான மேலதிக செலவினமொன்றைச் செய்வதற்கு நேரிட்டது.

(iv) உத்தேசிக்கப்பட்ட கட்டிடத்திற்கான மொத்த சதுர பரப்பின் அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் கொழும்பு மாநகர சபைக்குமான சேவைக் கட்டணங்கள் முறையே ரூபா 3,714,000 மற்றும் ரூபா 292,709 தொகைகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்த நிருவாகக் கட்டிடத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 2,615,738 தொகையானது செயற்பாடற்ற செலவினமாக ஏற்பட்டிருந்தது.

**2.2.5 பயன்பாடற்ற சொத்துக்கள்**

நிறுவகத்தினால் ரூபா 2,631,220 செலவு செய்யப்பட்டு ஒரு தடவையில் ஐம்பது நபர்களுக்கு மொழி பெயர்ப்பு வசதிகள் வழங்கக் கூடிய நவீன தொடர்பாடல் மற்றும் மொழிபெயர்ப்பு உபகரணங்கள் தொகுதியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பிரிவிற்கு அவசியமான மொழிபொயர்ப்பாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படாமையினால் நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளுக்காக மொழிபெயர்ப்பு உபகரணங்களை ஈடுபடுத்த முடியாதிருந்தது.

**2.2.6 சிக்னமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

மீளாய்வாண்டின் போது அவுஸ்ரேவியாவிலுள்ள மொனேஸ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றிய ஒரு உத்தியோகத்தருக்காக ரூபா 50,491 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அனுசரணை நிறுவகத்தினால் எஞ்சிய சகல செலவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2009 மார்ச் 02 ஆந் திகதி சேவையில் சேர்க்கப்பட்டிருந்த இவ் உத்தியோகத்தர் 2010 நவம்பர் 04 ஆந் திகதி சேவையிலிருந்து அகற்றப்பட்டிருந்தார். எவ்வித பிணை முறைகளும் இன்றி மிகக் குறைந்த சேவைக் காலத்தையுடையவருக்கு வெளிநாட்டு பயிற்சிக்காக அனுப்புவதற்காக செய்யப்பட்ட செலவினம் உபயோகமற்றிருந்தது.

**2.2.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

விரிவுரைகள் நடத்துதல் உள்ளடங்கலாக பல்வேறு செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்ற விரிவுரையாளர்களுக்கு ரூபா 6,763,742 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2007 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய கௌரவ அமைச்சரின் சிபார்சின் அடிப்படையில் திறைசேரியினால் அங்கீகாரமளிக்கப்பட்ட வெளியார் சேவைகள் வழங்கல் சம்பந்தமாக கொடுப்பனவு நடைமுறைகளின் பிரகாரம் இக்கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் அச்சகல சேவைகளும் நாளாந்த கடமை நேரத்திலேயே வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இக் கொடுப்பனவுகள் நிறுவகம் தாபிக்கப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பானதாக இருந்ததனால் அச் செயற்பாடுகளுக்காக மேலதிகக் கொடுப்பனவு செய்தல் அடிப்படைக்கு முரணானதாக உள்ளது.

### 2.2.8 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

---

2004 தொடக்கம் 2007 வரையிலான காலப்பகுதியில் விடுதிகளில் குடியிருந்த 05 உத்தியோகத்தர்கள் மற்றும் வெளி நிறுவகங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 633,150 தொகையினை விடுதி நிர்வாகத்தில் காணப்படுகின்ற நலிவு காரணமாக அறவீடு செய்ய முடியாதிருந்தது.

### 2.2.9 உள்ளகக் கணக்காய்வு

---

அரசாங்க நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் நிறுவகத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலகினைக் கொண்டேனும் எதிர்பார்த்த பணிகளை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இது சம்பந்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக உள்ளகக் கணக்காய்வு பதவியொன்றைத் தோற்றுவிப்பதற்கு முகாமைத்துவத் திணைக்களத்தினால் 2008 ஏப்ரல் 22 ஆந் திகதிய அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் 2011 மே மாதம் வரையிலும் நிறுவகத்தினுள் உள்ளகக் கணக்காய்வுப் பரிவொன்றைத் தாபிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.10 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கிடையில் அசாதாரண முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) ஒப்பந்த நிர்வாகம்

(ஆ) பாடநெறிகளை நடாத்துதல்.

(இ) வெளிநாட்டுப் பிரயாணச் செலவுகள்

(ஈ) உள்ளகக் கணக்காய்வு